முருகப்பெருமான் துணை

**மகான் ஏனாதி நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**09.02.2023**, வியாழக்கிழமை

1. யோக ஞான சித்தே அரங்கா
   உலகநலம் காக்க வந்த
   யோகராஜனே ஞான தேசிகா
   உயர் ஞானி உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது கலை திங்கள்
   குறைவிலா இருபானாற்திகதி குருவாரம்
   (சுபகிருது வருடம் தை மாதம் **26** ம் நாள் **09.02.2023**, வியாழக்கிழமை)
   தெரிவிப்பேன் அனுகூல ஆசி
   தேசிகனுக்கு ஏனாதிநாயனார் யானும்
3. யானுரைக்க சன்மார்க்கம் எனும்
   உயர்ஞான உண்மை நெறிதனை
   ஞானமாக மக்கள் ஏற்றுவர
   நம்பியே அரங்கனின் உபதேசம் பெற
4. உபதேசம் பெற மக்களின் வதையான
   ஊழதும் அகன்று மேவும்
   அபயமென அரங்கன் திருவடிபற்ற
   ஆதரவு தந்து ஞானிகள் பலம்
5. பலம் பெருந்துணையாக வரும்
   பண்பு நலம் பரிபக்குவமும்
   சலனமற சர்வபலமும் பெற்று
   சாற்றிடுவேன் ஞானவான்கள் ஆவர்
6. ஆவரே அரங்கன் தேடும்
   ஆற்றல் மிக்கவர்கள் ஆகி
   புவனம் எங்கிலும் அரங்கனின்
   புண்ணிய வழிகளை காட்டி
7. காட்டியே உலகோரை தேற்றி
   கலியினில் வாழுகின்ற காலமே
   வாட்டம் நீக்கி அமைதிபடவே
   வாழும் யோகமும் தெளிவும் அடைவர்
8. அடையவே படிப்படியாகவே இனி
   அகிலமெங்கிலும் அரங்கனுக்கு
   தடையின்றி வரவேற்பு கூடி
   தரணியில் ஞானவான்கள் படைபெருக
9. பெருகவே எங்கும் எதிலும்
   பேராசான் அரங்கன் ஆசி
   முருகப் பெருமான் அம்சமாக
   முழுமைதரும் ஞானமாகப் பரவி

10. பரவியே மனித சக்தியை
பாதுகாக்கத் தவறிய தலைமைகளை
தரணியில் அகற்றும் பலமாக
தாமுரைப்பேன் ஞானத் தலைமை கூடி

11. கூடியே ஞான ஆட்சிதனை
குவலயம் கண்டடைய நேரும்
தேடிவர அரங்கனால் மாற்றம்
தேசமதும் சடுதி காண்கும்
அனுகூல ஆசி முற்றே

—சுபம்—